**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.107/2018**

**Deposition of P.W. 2**

| | | |
|---|---|---|
| Name | : | செந்தில் |
| S/o, D/o, W/o | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 21.02.2024**

**(Accused absent. 317 Crpc Petition filed and allowed).**

**முதல் விசாரணை–**

நான் பூங்கடையில் வசித்து வருகிறேன். நான் எலெக்ட்ரீசியன் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ஸ்டாலின் என்பவரை எனக்குத் தெரியும். சாட்சி சதீஷ் என்பவரை எனக்குத் தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத இவ்வழக்கின் எதிரி ஜாண் கிட்லர் என்பவரை எனக்குத் தெரியும். 26.03.2014ம் தேதி காலை 10.30 மணிக்கு நானும் சாட்சி சதீஷ் என்பவரும் பூக்கடையிலிருந்து புங்கரை நோக்கி நடந்து வந்துக் கொண்டிருந்தோம். அப்போது எதிரி ஜாண் கிட்லர் அ.சா.1ன் ஸ்டாலினின் சட்டை பையில் இருந்து ரூ.200/–ஐ எடுத்தும் எனக்கு எதிராக கோர்டில் சாட்சி சொல்வாயா என்று ஏசி தள்ளைய ஒத்த பயலே என்று கெட்டவார்த்தையால் ஏசியும், இடுப்பில் மறைத்து வைத்திருந்த வெட்டுகத்தியை எடுத்து எதிரி அ.சா.1ஐ வெட்ட முயற்சி செய்த போது ஸ்டாலின் தனது இடது கையல் தடுத்ததால் ஸ்டாலினின் இடது கையில் ரத்தகாயம் ஏற்பட்டது. மேலும் அருகில் யாரும் வந்தால் அவர்களையும்

கொலை செய்து விடுவதாக எதிரி மிரட்டினார். மேற்படி வழக்கு சம்பவம் குறித்து தக்கலை போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். சாட்சி எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.